

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (5.3.2026) தலைமைச் செயலகத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா தேர்தல் நடத்தும் அலுவலரும், சட்டமன்றப் பேரவை கூடுதல் செயலாளருமான திருமதி இரா.சாந்தி அவர்களிடம் வேட்பு மனுவை தாக்கல் செய்தார். உடன், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ. சண்முகம், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பாலாஜி ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (5.3.2026) தலைமைச் செயலகத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் பேராசிரியர் ஜே. கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் அவர்கள் தேர்தல் நடத்தும் அலுவலரும், சட்டமன்றப் பேரவை கூடுதல் செயலாளருமான திருமதி இரா.சாந்தி அவர்களிடம் வேட்பு மனுவை தாக்கல் செய்தார். உடன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் மு. வீரபாண்டியன், சட்டப்பேரவை துணைத் தலைவர் கு. பிச்சாண்டி, நாடாளுமன்ற உறுப்பினர் துரை வைகோ ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (5.3.2026) தலைமைச் செயலகத்தில், அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் சார்பில், மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் எம். கிறிஸ்டோபர் திலக் தேர்தல் நடத்தும் அலுவலரும், சட்டமன்றப் பேரவை கூடுதல் செயலாளருமான திருமதி இரா.சாந்தி அவர்களிடம் வேட்பு மனுவை தாக்கல் செய்தார். உடன், தமிழ்நாடு மாநில காங்கிரஸ் மேலிடப் பொறுப்பாளர் கிரிஷ் ஜோடங்கர், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான கு. செல்வப்பெருந்தகை, மனிதநேய மக்கள் கட்சி தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (5.3.2026) தலைமைச் செயலகத்தில், தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் சார்பில், மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் எல்.கே. சுதீஷ் தேர்தல் நடத்தும் அலுவலரும், சட்டமன்றப் பேரவை கூடுதல் செயலாளருமான திருமதி இரா.சாந்தி அவர்களிடம் வேட்பு மனுவை தாக்கல் செய்தார். உடன், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் பொதுச் செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த், சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் எஸ். ராஜேஷ்குமார் ஆகியோர் உள்ளனர்.



கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (5.3.2026) முகாம் அலுவலகத்தில், மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜே. கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



கழக பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்களை, அவரது இல்லத்தில், மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலில் கழக வேட்பாளர்களில் ஒருவராக அறிவிக் கப்பட்டுள்ள, கழகக் கொள்கை பரப்புச் செயலாளர் திருச்சி சிவா சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### ஜனநாயகத்தை காத்திடும் குரலாய்

# மாநிலங்களவையில் தொடர்ந்து ஒலிப்போம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, மார்ச். 6-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-**

ஜனநாயகத்தைக் காத்திடும் குரலாய் நாடாளுமன்ற மாநிலங்களவையில் தொடர்ந்து ஒலிப்போம்!

மக்களின் நம்பிக்கையைப் பெற்று, தமிழ்நாட்டில் புதிய வரலாறு படைத்துக் கொண்டிருக்கும் நமது கூட்டணி சார்பில், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திருச்சி சிவா மற்றும் பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், காங்கிரஸ் பேரியக்கத்தைச் சேர்ந்த கிறிஸ்டோபர் திலக், தே.மு.தி.க.வைச் சேர்ந்த எல்.கே. சுதீஷ் ஆகியோர் கூட்டணிக் கட்சியினருடன் மாநிலங்களவைக்கு வேட்பு மனு தாக்கல் செய்துள்ளனர்.

நமது அரசியல்சட்ட விழுமியங்களையும் இந்திய நாட்டின் ஒற்றுமைபன்மைத்துவம் ஆகியவற்றையும் பேணிக் காத்திடத் தொடர்ந்து பணியாற்றுவோம்!

இவ்வாறு கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.



மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகே ராயபாளையம் விலக்கில் நாளை (7 ஆம் தேதி) கழகத் தலைவர் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தலைமையில் மாற்றுக் கட்சியினர் தி.மு.க.வில் இணையும் இணைப்பு விழாவிற்கான முன்னேற்பாடு பணிகளை கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் கழக நிர்வாகிகள் மற்றும் கழகத்தினர் திரளாக பங்கேற்றனர்.



தேனி வடக்கு மாவட்டம் தேனி தனியார் மண்டபத்தில் தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. தலைமையில் கட்சி நிர்வாகிகளை முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் சந்தித்து தேர்தல் பணி குறித்து அலோசனை மேற்கொண்டார். உடன் பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் சரவணகுமார், போடி தொகுதி பார்வையாளர் நேருபாண்டி, மாவட்ட அவைத் தலைவர் பி.டி.செல்லபாண்டியன் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.